**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.204/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் நாள் செவ்வாய் கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கார்த்தி (முகவர்) | த/பெ.: | கந்தசாமி |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | ரியல் எஸ்டேட் |
| வயது: | 48 | முகவரி: | திருத்துறைப்பூண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 17.06.2025

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதியின் பொது அதிகார முகவர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 08.01.2021–ல் வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்த பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 27.01.1993–ல் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரயப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். வாதி பெயரில் உள்ள ஆதார் அட்டை மற்றும் எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல்கள் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) அது **வா.சா.ஆ.3 வரிசைகள்** ஆகும். 07.10.2023–ல் வாதி எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் அசல் **வா.சா.ஆ.4** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.